1997 மார்ச் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தாமரைக்கனி, உட்காருங்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. தாமரைக்கனி அவர்கள் விடுத்துள்ள சிறப்புக் கவன ஈர்ப்பு குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடைய அறிக்கைகள், குறிப்பாக பால்பண்ணை மேம்பாட்டுத் துறை அறிக்கை, காவல் துறை அறிக்கை, மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கை இவைகள் எல்லாம் எனக்கு வந்துள்ளன என்றாலும் கூட, இவைகளைப்பற்றியெல்லாம் இங்கே விரிவாக எடுத்துரைக்க நான் விரும்பவில்லை; இது தேவையும் இல்லை என்று கருதுகிறேன். ஏனென்றால் அந்தத் தேர்தல் நடைபெறவில்லை மீண்டும் நடைபெற இருக்கின்ற தேர்தல்தான். தேர்தலில் இதுபோன்ற கலவரங்கள் ஏற்பட்டு, தேர்தலை மீண்டும் நடத்த வேண்டுமென்று எதிர்க்கட்சிகள் கூறுகிற நேரத்தில் தேர்தலை ஒத்தி வைத்துவிட்டு, பின்னர் இந்த அரசு தேர்தலை—கூட்டுறவுத் தேர்தலை—நடத்தியதற்கு பல உதாரணங்கள் உள்ளன. குறிப்பாக சென்னை, தியாகராய நகரில் நடைபெற்ற ஒரு கூட்டுறவுச் சங்கத் தேர்தலில் சி.பி.எம். கட்சியினர், இதுபோன்ற ஒரு புகாரைச் சொல்லி தேர்தலை மீண்டும் நடத்த வேண்டும், முடிவுகளை அறிவிக்கக் கூடாது என்று கோரிக்கை வைத்ததை நான் ஏற்றுக்கொண்டு அந்தத் தேர்தலின் முடிவுகளை அறிவிக்காமல் மீண்டும் தேர்தல் நடத்தப்பட்டது. அந்தத் தேர்தல் முடிவுகள் தி.மு.க. சார்புடையவர்களுக்கு ஆதரவாக அமைந்தது—இரண்டாவதாக நடத்தப்பட்ட தேர்தல். எனவே, திருவில்லிபுத்தூரில் நடைபெற்ற இந்தத் தேர்தலும் மீண்டும் நடைபெற இருக்கிறது; நடத்துவோம் என்ற உறுதியைத் தெரிவிக்கிறேன்.

அதிகாரிகளிடமிருந்து வந்துள்ள விவரங்களை மாத்திரமே வைத்துக் கொண்டு, நான் அந்த அடிப்படையிலே எதுவும் பேச விரும்பவில்லை. ஆனால் ஒரு தனியார் பேருந்தினுடைய ஓட்டுநர், தில்லை மூர்த்தி என்பவர் தன்னுடைய, தான் ஓட்டி வந்த பேருந்தின்மீது கல் எறிந்ததாக நண்பர் தாமரைக்கனி, அவரது மகன் இன்பத்தமிழன் மற்றும் 117 பேர் மீது புகார் கொடுத்து இருக்கிறார். அந்தப் புகார் திருவில்லிபுத்தூர் காவல் நிலையக் குற்ற எண் 140/97, இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 147, 148, 341 ஆகியவற்றின்கீழ், பொதுச் சொத்து சேதத் தடுப்புச் சட்டம் 2 மற்றும் 3 பிரிவுகளின்கீழ், வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. கலவரத்தில் ஈடுபட்ட சீனிவாசன் மற்றும் 13 பேர் 3-3-1997 அன்று கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த வழக்குகளில் முறைப்படி விசாரணை

முடித்து, தாமரைக்கனி, அவருடைய மகன் இன்பத்தமிழன், மற்றும் 58 நபர்கள்மீது 4-3-1997 அன்று குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் யாரும், தாமரைக்கனியோ அவருடைய மகனோ கைது செய்யப்படவில்லை என்பதை இந்த மன்றமே மிக நன்கு அறியும்.

தாமரைக்கனி அவர்கள் தன்னைத் தாக்கியது சம்பந்தமாக காவல் நிலையத்தில் ஏதும் புகார் கொடுக்கவோ, மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெறவோ இல்லை என்றும் அதிகாரிகளுடைய குறிப்பு எனக்குத் தெரிவிக்கின்றது. வாக்குவாதம் மோதலாக ஆகிவிடக் கூடாது என்பதற்காகத்தான் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள். மேலும் இதனை விசாரித்து நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே இந்தத் தீர்மானத்தைப் பற்றி விவாதிப்பது தேவையில்லை என்று, மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இது குறித்த மனு ஒன்றைச் சமர்ப்பிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, கொடுத்துவிடுங்கள்.

(திரு. தாமரைக்கனி சில தாள்களை மாண்புமிகு முதல்வர் அவர்களிடமும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடமும் கொடுத்தார்.)

(ஆ) கயத்தாறு வீரபாண்டிய கட்டபொம்மன் ஆதிதிராவிட மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவிகள் சமூக விரோதிகளால் தாக்கப்பட்டமை

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த சிறப்புக் கவன ஈர்ப்பு. 3-3-1997 அன்று கயத்தாறிலுள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் ஆதிதிராவிட நலத் துறை மேல்நிலைப் பள்ளியில் சில சமூக விரோதிகள் நுழைந்து அங்கு படிக்கும் மாணவ மாணவிகளைத் தாக்கியது, மேலும் அப்பகுதியில் உள்ள கடைகளைச் சேதப்படுத்தியது குறித்து டாக்டர் க. கிருஷ்ணசாமி.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . .